## இலங்கைப் பாராளுமன்றம்
## பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் உள்ள பின்வரும் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தயாரித்த விண்ணப்பங்கள் கல்வி / தொழில் தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் **"பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே"** எனும் முகவரிக்கு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

**கவனிக்க வேண்டியது**: விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் மேல் பக்கத்தில் கட்டாயம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

### 1. பணிப்பாளர் (தொடர்பாடல்) பதவி

1.1 **சம்பள அளவுத்திட்டம்:-** 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 67,485- 4x1,630/ 8 x 2,170 - ரூ.91,365/- (அனைத்து கொடுப்பனவுகளும் அடங்கலாக ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் சுமார் ரூ. 142,000/) ஆகும்.

1.2 **வயதெல்லை:-** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 35 வயதுக்கு குறையாமலும் மற்றும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் மற்றும் பாராளுமன்ற சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

1.3 **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:-**

அ) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள பட்டத்தை வழங்கும் ஒரு நிறுவனத்தில் இருந்து பெற்ற தொடர்பாடல் அல்லது சந்தைப்படுத்தல் பற்றிய ஒரு முதுமானிப் பட்டம்

அத்துடன்

சந்தைப்படுத்தல், பொதுமக்கள் உறவு, உபசரணை மற்றும் தொடர்பாடல் தலைமைத்துவ வகிபங்கில் குறைந்தது ஐந்து ஆண்டு தொழில் அனுபவம்

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள பட்டத்தை வழங்கும் ஒரு நிறுவனத்தில் இருந்து பெற்ற வியாபார முகாமைத்துவம் பற்றிய பட்டம், சந்தைப்படுத்தல் பற்றிய பட்டம், வியாபார நிருவாகம் பற்றிய பட்டம், சந்தைப்படுத்தல் பற்றிய விஷேட பட்டம், கலைப் பட்டம் (தொடர்பாடல், வெகுஜன ஊடகம், பொதுமக்கள் உறவு மற்றும் ஊடக முகாமைத்துவம், தொடர்பாடல் மற்றும் ஆக்கக்கலை மற்றும் சமூக விஞ்ஞானம் ஒரு பாடமாக) உபசரணை சேவை மற்றும் பொழுதுபோக்கு முகாமைத்துவம் பற்றிய பட்டம், வெகுஜன ஊடகம் பற்றிய பட்டம்

அத்துடன்

சந்தைப்படுத்தல், பொதுமக்கள் உறவு, உபசரணை மற்றும் தொடர்பாடல் தலைமைத்துவ வகிபங்கில் பத்து ஆண்டு தொழில் அனுபவம்

அல்லது

இ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே அமர்வில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் / கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்கள / தமிழ் மொழியில் திறமை சித்தியுடன், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்திகள் அடங்கலாக 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

சந்தைப்படுத்தல், பொதுமக்கள் உறவு, உபசரணை மற்றும் தொடர்பாடல் தலைமைத்துவ வகிபங்கில் இருபது ஆண்டு தொழில் அனுபவம்

**1.4 ஆட்சேர்ப்பு முறை:-** கட்டமைந்த ஒரு நேர்முக பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் தகவுதிறன்கள் பின்வருமாறு:

| **தொடர் இலக்கம்** | **விடயப் பிரிவு** |
|---|---|
| 1 | மேலதிகக் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் தகைமைகள் |
| 2 | டிஜிட்டல் ஊடக பாவனை பற்றிய அனுபவம் மற்றும் அறிவு |
| 3 | மொழி மற்றும் தொடர்பாடல் திறன்கள் |
| 4 | மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பற்றிய அறிவு |
| 5 | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

**1.5 ஏனைய நன்மைகள் -** சாரதியுடன் ஒரு வாகனம் வழங்கப்படும்.

## 2 சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:-

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கை தீர்மானத்திற்கு அமைய நிர்ணயிக்கப்படும் என்பதற்கு அமைவாக இருக்கும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். உள்ளக விண்ணப்பதாரர் ஒருவர் அல்லது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள நபர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார். தற்பொழுது அரச துறையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்படாத 45 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட விண்ணப்பதாரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவருக்கான நியமனம் நீடிக்கப்படுவதற்கு சாத்தியமுள்ள இரண்டு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக் குறிப்புகளுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் / தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

3 விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் கேட்டுக்கொள்ளப்படும் போது மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(அ) பிறப்பு சான்றிதழ்

(ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள்

(இ) தொழில் தகைமை சான்றிதழ்கள்

(ஈ) அனுபவ சான்றிதழ்கள்

4 அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் / அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் / நியதிச்சட்டசபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்களும் உள்ளக விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள / நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

5 பதவியை பெறும் நோக்கில் ஏதாவது ஒரு விதத்தில் செல்வாக்கு செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

6 விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள ஏதாவது தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது என கண்டறியப்பட்டால், அவர் தகைமையற்றவர் என குறிப்பிடப்படுவதற்கும் மற்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

7 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள / நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிற்குப் பின்னர் திணைக்கள / நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டு கிடைக்கும் விண்ணப்பங்களும் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்**

பாராளுமன்ற செயலாளர் நாயகம்
இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே
2024 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி